Government of **Western Australia**
**School Curriculum and Standards Authority**

**ATAR course sample examination**

**Question/Answer booklet**

# TAMIL: BACKGROUND LANGUAGE

Please place your student identification label in this box

WA student number: In figures

In words

## Time allowed for this paper

Reading time before commencing work: ten minutes
Working time: two and a half hours

## Materials required/recommended for this paper

***To be provided by the supervisor***
This Question/Answer booklet
Sound recording

Number of additional answer booklets used (if applicable):

***To be provided by the candidate***

Standard items: pens (blue/black preferred), pencils (including coloured), sharpener, correction fluid/tape, eraser, ruler, highlighters

Special items: monolingual and/or bilingual print dictionaries

Note: Dictionaries must not contain any notes or other marks. No electronic dictionaries are allowed.

## Important note to candidates

No other items may be taken into the examination room. It is **your** responsibility to ensure that you do not have any unauthorised material. If you have any unauthorised material with you, hand it to the supervisor **before** reading any further.

2024/61442
Copyright © School Curriculum and Standards Authority 2024

## Structure of the examination

The Tamil: Background Language ATAR course examination consists of a written component and a practical (oral) component.

## Structure of this paper

| Section | Number of questions available | Number of questions to be answered | Suggested working time (minutes) | Marks available | Percentage of written examination |
|---|---|---|---|---|---|
| Section One<br>Listening and responding<br>Part A: Listening and responding in English | 2 | 2 | 20 | 15 | 15 |
| Part B: Listening and responding in Tamil | 1 | 1 | 20 | 20 | 15 |
| Section Two<br>Reading and responding<br>Part A: Reading and responding in English | 2 | 2 | 25 | 25 | 10 |
| Part B: Reading and responding in Tamil | 2 | 2 | 45 | 40 | 20 |
| Section Three<br>Writing in Tamil | 2 | 1 | 40 | 20 | 40 |
| | | | | **Total** | 100 |

## Instructions to candidates

1. The rules for the conduct of the Western Australian external examinations are detailed in the *Year 12 Information Handbook: Part II Examinations*. Sitting this examination implies that you agree to abide by these rules.

2. Write your answers in Standard Australian English or Tamil in this Question/Answer booklet preferably using a blue/black pen. Do not use erasable or gel pens.

3. You must be careful to confine your answers to the specific questions asked, and to follow any instructions that are specific to a particular question.

4. Supplementary pages for planning/continuing your answers to questions are provided at the end of this Question/Answer booklet. If you use these pages to continue an answer, indicate at the original answer where the answer is continued, i.e. give the page number.

**Section One: Listening and responding** **30% (35 Marks)**

This section contains **two** parts, **two** texts and **three** questions.

You will hear **two** texts in Tamil. Each text will be played twice. There will be a short pause between the first and second readings. After the second reading, there will be time to answer the questions.

You may make notes at any time. Your notes will not be marked. You may come back to this section at any time during the working time for this paper.

**Part A: Listening and responding in English**
There is **one** text and **two** questions. Answer the questions in **English** in the space provided.

**Part B: Listening and responding in Tamil**
There is **one** text and **one** question. Answer the question in **Tamil** in the space provided.

Suggested working time: 40 minutes.

---

Listen to the short text that is printed below. This will help you to become accustomed to the speakers' voices. There are no questions or marks associated with this text.

| | |
|---|---|
| A: | வணக்கம் துவாரகா |
| B: | வணக்கம் மகிழன் |
| A: | நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? |
| B: | நான் மிகவும் நன்றாக இருக்கிறேன். நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? |
| A: | நானும் நலமாக இருக்கிறேன். அடுத்த மாதம் பாடசாலை விடுமுறைக்கு எங்கு செல்லப் போகிறீர்கள்? |
| B: | எங்கள் குடும்பத்தினர் எல்லோரும் தமிழ்நாட்டில் உள்ள இராமநாதபுரம் என்ற இடத்திற்குச் செல்ல இருக்கிறோம். |
| A: | அங்கு எவற்றைப் பார்க்கத் திட்டமிட்டுள்ளீர்கள்? |
| B: | அங்கு செல்லப் போவதாக முடிவுதான் செய்துள்ளோம். பார்க்கப் போகும் இடங்களை இன்னும் திட்டமிடவில்லை. மிக விரைவில் நாங்கள் அவற்றைத் தீர்மானிப்போம். |

**Turn over page and begin Section One**

**Part A: Listening and responding in English** **15% (15 Marks)**

There is **one** text and **two** questions. Answer the questions in **English** in the space provided.

Suggested working time: 20 minutes.

---

**Text 1: குடும்ப வாழ்க்கைமுறை விருப்பங்கள்**

Listen to the conversation and answer Questions 1 and 2 in **English**.

| Space for notes |
| --- |
| |

**Question 1** **(12 marks)**

நீங்கள் மாறனினதும் அகானாவினதும் கலந்துரையாடலைக் கேட்டீர்கள். அகானாவும் மாறனும் தங்கள் எதிர்கால குடும்ப வாழ்க்கை விருப்பங்கள் பற்றி ஒவ்வொருவரும் கூறிய **மூன்று** கருத்துகளை விமர்சிப்பதுடன், எதிர்கால குடும்ப வாழ்க்கை விருப்பங்கள் பற்றிய உங்கள் கருத்தையும் உள்ளடக்கிய பிரதிபலிப்புச் சுருக்கம் ஒன்றை எழுதுக.

You have listened to Maran and Akana’s discussion. Write a reflective summary commenting on **three** points that Akana **and** Maran each said about their future family choices and state your point of view about family choices.

Write approximately **60** words in **English**.

**Question 2** **(3 marks)**

அகானாவின் எதிர்கால விருப்பங்களுக்கு எதிராக மாறன் கூறிய **மூன்று** ஆட்சேபனைகள் **அல்லது** மாறனின் எதிர்கால விருப்பங்களுக்கு எதிராக அகானா கூறிய மூன்று ஆட்சேபனைகளைப் பட்டியலிடுக.

List **three** objections Maran made to Akana's future choices **or** Akana made to Maran's future choices. Tick the box to indicate your selection and write your answer below.

☐ Maran's objection against Akana

OR

☐ Akana's objection against Maran

One: ________________________________________________

________________________________________________

Two: ________________________________________________

________________________________________________

Three: ________________________________________________

________________________________________________

This page has been left blank intentionally

**Part B: Listening and responding in Tamil** **15% (20 Marks)**

There is **one** text and **one** question. Answer the question in **Tamil** in the space provided.

Suggested working time: 20 minutes.

---

**Text 2: பாவேந்தர் பாரதிதாசனின் வாழ்க்கைப் பயணம்**

Listen to the description and answer Question 3 in **Tamil**.

| Space for notes |
| --- |
| |

**Question 3** **(20 marks)**

தமிழகரம் வானொலி நிகழ்ச்சியைக் கேட்டவுடன், பாரதிதாசனின் பாடல்களைக் கேட்கவும், அவரின் கவிதைகளைப் படிக்கவும் மிகவும் ஆர்வமுள்ள உங்கள் நண்பருக்கு, பாரதிதாசனின் வாழ்க்கை மற்றும் சமூக பங்களிப்புகளைப் பற்றி விபரிக்கும் மின்னஞ்சல் ஒன்றை எழுதுக. உங்கள் மின்னஞ்சலில் பின்வருவனவற்றை உள்ளடக்கவும்:

- அவரது பின்னணி பற்றிய **நான்கு** தகவல்களைக் குறிப்பிடுக
- அவர் தனது பெயரை ‘பாரதிதாசன்’ என்று மாற்றியமைக்கான **இரண்டு** காரணங்களைக் கூறுக
- தமிழுக்கு அவர் ஆற்றிய **மூன்று** பங்களிப்புகள் பற்றியும் எவ்வாறு அவரது பெயர் இன்றும் பிரபல்யமாக இருக்கிறது என்பதைப் பற்றியும் விபரிக்குக.

Having heard the Tamizhakaram radio program, you are inspired to write an email to your friend, who is very interested in listening to Bharathithasan’s songs and reading his poems. In your email describing Bharathithasan's life and contributions, you should:

- state **four** pieces of information about his background
- state **two** reasons behind his alias ‘Bharathithasan’
- outline **three** contributions to Tamil art and how his name is still proclaimed today.

Write approximately **75** words in **Tamil**.

End of Section One

See next page

**Section Two: Reading and responding** **30% (65 Marks)**

This section contains **three** texts and **four** questions.

**Part A: Reading and responding in English**
There is **one** print text and **two** questions. Answer **both** questions in **English** in the spaces provided.

**Part B: Reading and responding in Tamil**
There are **two** print texts and **two** questions. Answer **both** questions in **Tamil** in the spaces provided.

Supplementary pages for planning/continuing your answers to questions are provided at the end of this Question/Answer booklet. If you use these pages to continue an answer, indicate at the original answer where the answer is continued, i.e. give the page number.

Suggested working time: 70 minutes.

---

**Part A: Reading and responding in English** **10% (25 Marks)**

There is **one** print text and **two** questions. Answer **both** questions in **English** in the spaces provided.

Suggested working time: 25 minutes.

---

**Text 3: உலக அரங்கில் தமிழ் மொழி அன்றும் இன்றும்**

Read this article and answer Questions 4 and 5 in **English**.

உலகின் பழமையான மொழிகளில் ஒன்றான தமிழ் மொழி, தென்னிந்தியாவில் (in South India) உருவான திராவிட மொழிகளுக்கெல்லாம் மூத்த மொழியாகும். உலகில் செம்மொழி என்ற மேன்மையைப் பெற்ற ஏழு மொழிகளுள் தமிழ் மொழியும் ஒன்றாகும். தமிழ் மொழியின் இலக்கண நூலான தொல்காப்பியம் என்னும் நூல் கி.மு இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகும். தனித்துவமான இலக்கிய வழமையையும் செழுமையையும் கொண்ட மொழியாக தமிழ் மொழி விளங்குகிறது.

சோழ மன்னர்களின் ஆட்சிக்கு முன்னரே வணிகர்கள் மூலம் தமிழ் மொழி உலகின் பல்வேறு நாடுகளுக்கும் பரவத் தொடங்கியது. சோழர்கள் தென்கிழக்கு ஆசிய நாடுகளை ஆட்சி செய்தபோது அந்த நாட்டு மொழிகளுடன், தமிழையும் வளர்த்தனர். தெற்காசிய நாடுகளில் செய்யப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின் போது, தமிழில் எழுதப்பட்ட பட்டயங்கள் கிடைத்துள்ளன. மேலும், கொரியா (Korea) நாட்டுடன் தமிழ்நாட்டு (Tamil Nadu) அரசர்கள் திருமண உறவு வைத்திருந்ததாக இலக்கிய நூல்கள் எடுத்துரைக்கின்றன.

தற்பொழுது உலகில் ஒன்பது கோடி மக்கள் தமிழைத் தமது தாய்மொழியாக பேசுகின்றார்கள். இந்தியாவில் (in India) தமிழ்நாடு (Tamil Nadu) மாநிலம் தவிர இலங்கை (Sri Lanka) மற்றும் சிங்கப்பூர் (Singapore) போன்ற நாடுகளில் அதிகாரபூர்வ மொழிகளில் ஒன்றாக தமிழ் விளங்குகின்றது. அதுமட்டுமன்றி அவுஸ்திரேலியா/ஆஸ்திரேலியா (Australia) உட்பட உலகின் பல்வேறு நாடுகளின் பள்ளிப் பாடத்திட்டத்தில் தமிழ் மொழியும் இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழ் மொழியைத் தாய்மொழியாக கொண்ட மாணவர்கள் மட்டுமன்றி வேற்று மொழியைத் தாய்மொழியாக கொண்ட மாணவர்களும் தமிழ் மொழியை இரண்டாம் மொழியாக கற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. உலக நாடுகள் பல முன்னின்று தமிழ் மொழியை மாணவர்களுக்குக் கற்பிப்பதற்குக் காட்டும் ஆர்வமானது நம் தாய்மொழியாம் தமிழுக்குக் கிடைத்த பெருமையே.

மேலும், உலகெங்கிலும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள், பல்வேறு நாடுகளிலும் தமிழ்ப் பாடசாலைகளை ஆரம்பித்து தன்னார்வலர்களாக தமிழ் மொழியைக் கற்பித்து வருகின்றனர். அத்துடன் புலம்பெயர் தேசங்களில் பிறந்து தமிழ் மொழியை இரண்டாம் மொழியாக கற்ற பல மாணவர்கள், இன்று உலகெங்கும் தமிழ் மொழி ஆசிரியர்களாக பணிபுரிந்து தமிழ் மொழியைக் கற்பிப்பது தமிழராகிய நாமெல்லோரும் பெருமைப்படக் கூடிய விடயமாகும். ‘தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா’ எனும் மகாகவி பாரதியாரின் வரிகளுக்கு இணங்க இவர்கள் தலைநிமிர்ந்து செயற்படுவது எதிர்காலத்தில் தேமதுரத் தமிழோசை உலகெல்லாம் பரவும் என்பதை உறுதிப்படுத்துகிறது.

**Question 4** **(16 marks)**

இக்கட்டுரையில் உள்ள தகவல்களைக் கருத்திற் கொண்டு, பின்வரும் கருத்துக்களை உள்ளடக்கிய குறிப்பொன்றை உங்கள் நண்பருக்கு எழுதுக.

- தமிழ்மொழியின் **மூன்று** சிறப்பியல்புகள்
- முன்னைய காலத்தில் தமிழ்மொழி தென்னிந்தியாவில் (from South India) இருந்து ஏனைய நாடுகளிற்கும் பரவியிருந்ததை எடுத்துக்காட்டும் **இரண்டு** சான்றுகள்
- தற்காலத்தில் உலகநாடுகளில் தமிழ்மொழி பரவியுள்ளமையை எடுத்துக்கூறும் **மூன்று** சான்றுகள்.

Drawing on this article, write an informative note to your friend. Include:

- **three** characteristics of the Tamil language
- **two** pieces of evidence that state the Tamil language had spread from South India to other countries in ancient times
- **three** pieces of evidence highlight the spread of the Tamil language in the world today.

Write approximately **100** words in **English**.

See next page

**Question 5** **(9 marks)**

இக்கட்டுரையில் உள்ள தகவல்களைக் கருத்திற் கொண்டு ‘உலகெங்கிலும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக செய்யும் பங்களிப்புகள்’ பற்றிய வலைப்பதிவொன்றை, தமிழ் வாசகர்களைத் தூண்டக்கூடிய வகையில் எழுதுக.

Drawing information from this article, write a blog post to persuade Tamil readers on how ‘Tamil migrants around the world contribute to developing the Tamil language abroad’.

Write approximately **50** words in **English**.

**This page has been left blank intentionally**

**Part B: Reading and responding in Tamil** **20% (40 Marks)**

There are **two** print texts and **two** questions. Answer **both** questions in **Tamil** in the spaces provided.

Suggested working time: 45 minutes.

---

**Text 4: வாழ்வோம் நாம் வளமாக**

Read this poem and answer Question 6 in **Tamil**.

**வாழ்வோம் நாம் வளமாக**

வளரும் எந்தன் பருவத்தில்
நான் வாழும் உலகின் கனவுகளை
தொகுத்து இங்கு அளிக்கின்றேன்
வாழ்வோம் நாம் வளமாக

தொண்டுகள் பலவும் புரிந்திடுவேன்
சமூக வேற்றுமை என்றும் எனக்கில்லை
வயதால் முதிர்ந்தோரைப் பராமரிப்பேன்
வனவிலங்குகளுக்காய்க் குரல் கொடுத்திடுவேன்

வனங்கள் இன்றி வாழ்வில்லை
வளர்ப்பேன் மரங்கள் வானுயர
வலம் வரும் உலகை அழிக்குமெனில்
வாங்கேன் விரும்பேன் வரும்பொருளை

அரசியல் அறிவு பெற்றிடுவேன்
ஆராய்ந்து வாக்குச் செலுத்திடுவேன்
ஆட்சியில் ஏதும் தவறிருந்தால்
ஆணித்தரமாய் எதிர்த்திடுவேன்

**Question 6** **(20 marks)**

கவிதையிலுள்ள தகவல்களைப் பயன்படுத்தி, எழுத்தாளரின் எதிர்காலப் பங்களிப்புகளைப் பற்றிய பின்வரும் கருத்துக்களைப் பிரதிபலித்து ஒவ்வொன்றிலும் **இரண்டு** வழிகளை உள்ளடக்கியதாக விபரமான விமர்சனம் ஒன்றை எழுதுக.

- எழுத்தாளர் சமூகத்திற்குப் பங்களிப்புச் செய்ய விரும்புபவை
- எழுத்தாளர் சுற்றுச்சூழலிற்குப் பங்களிப்புச் செய்ய விரும்புபவை
- எழுத்தாளர் அரசியலிற்குப் பங்களிப்புச் செய்ய விரும்புபவை
- இந்தக் கவிதை உங்கள் எண்ணங்களைத் தூண்டியமை.

Use information from the poem to reflect on how the author is willing to contribute to society. Write a detailed review in which you include **two** ways:

- the author is going to contribute to society
- the author is going to contribute to the environment
- the author is going to contribute to politics
- this poem inspires your thoughts.

Write approximately **120** words in **Tamil**.

This page has been left blank intentionally

**Text 5: நமது சூழலைக் காப்போம்**

Read this speech and answer Question 7 in **Tamil**.

அன்பிற்குரிய நண்பர்களே!

ஆதிகாலத்தில் பூமியில் உயிரினங்கள் இயற்கை வளங்களுடன் நல்ல சூழலில் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தன. காலப்போக்கில் மனிதனின் தலையீட்டாலும், தொழில் நுட்ப வளர்ச்சியாலும் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு பூமியின் சமநிலைத்தன்மைக்கு பெரும் அச்சுறுத்தல் உருவாகியுள்ளது. இயற்கைச்சூழலை எவ்வாறு பாதுகாப்பது என்று சிந்தித்து பார்ப்போமேயானால், நாங்கள் ஒவ்வொருவரும் எங்களை மாற்ற வேண்டும். பிறரை மாறச் சொல்வதைவிட எங்களை நாங்களே மாற்றிக் கொண்டால் இந்தப் பூமியில் விரைவில் பல நல்ல மாற்றங்கள் ஏற்படும். இதை மகாத்மா காந்தி 'இந்த உலகில் நீங்கள் காண விரும்பும் மாற்றமாக நீங்கள் இருங்கள்' என்று அழகாகக் கூறியுள்ளார்.

நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள் வீட்டுச் சூழலில் இருந்தே இதற்கான முயற்சிகளைத் தொடங்கலாம். உதாரணமாக மழை நீரைச் சேமித்துப் பயன்படுத்தல், சூரிய கலங்கள் மூலம் மின்சாரம் பெறல், நெகிழிப் பைகளிற்குப் பதிலாக துணிப்பைகளைப் பயன்படுத்தல், மீழ்சுழற்சி செய்யக் கூடிய பொருட்களைப் பயன்படுத்துதல் போன்ற சிறுசிறு முயற்சிகளில் தொடங்கி 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்ற பழமொழிக்கு ஏற்ப எங்களால் பெரியளவிலான மாற்றங்களை உருவாக்க முடியும்.

அடுத்து, நாம் ஒவ்வொருவரும் தொழில் செய்யும் இடங்களில் எவ்வாறான மாற்றங்களைச் செய்யலாம் எனப் பார்ப்போம். தொழிற்சாலைக் கழிவுகளை நீரிற் கலக்க விடாமற் பாதுகாத்தல், வெளிவரும் வாயுக்களை அகற்ற மாற்று வழிகளை அமைத்தல், குப்பைகளை நீர்ப்பிரதேசங்களில் கொட்டாமலிருத்தல், இரசாயன கிருமி நாசினிகள் மற்றும் செயற்கை உரங்கள் பயன்படுத்தலைத் தவிர்த்தல் என்பன போன்ற வழிமுறைகளைக் கையாளலாம்.

மேலும், ஒவ்வொரு சமுதாயத்தைச் சேந்தவர்களும் சில பங்களிப்புகளைச் செய்தல் வேண்டும். அதாவது, உள்ளூர்த் தயாரிப்புகளை ஊக்குவித்தல், குப்பைகள் எரித்தலைத் தவிர்த்தல், தேவையற்ற வெடிபொருட்கள் பயன்படுத்தலைக் குறைத்தல், நகரமயமாக்கலுக்காக இயற்கைக் காடுகள் அழிக்கப்படும் போதும், இயற்கை வளங்கள் அகழ்ந்தெடுக்கும் போதும் அநீதிகளுக்கு எதிராக சேர்ந்து குரல் கொடுத்தல் போன்றனவற்றைச் செய்யலாம். அனைவரிடமும் நான் தயவுடன் வேண்டுவது யாதெனில் 'மாற்றம் என்பது நம்மில் இருந்தே தொடங்கட்டும்'. பசுமையான பூமியை அழியாமற் பாதுகாக்க எல்லோரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

**Question 7** **(20 marks)**

உரையை வாசித்த பின் அதன் எழுத்தாளர் கூறும் பின்வரும் கருத்துக்கள் ஒவ்வொன்றிலும் நாம் செய்யக்கூடிய **இரண்டு** மாற்றங்களை உள்ளடக்கியதாக கட்டுரை ஒன்றை எழுதுக.

- தனிநபர்கள் செய்யக் கூடியவை
- வேலைத்தளங்களில் நாம் செய்யக் கூடியவை
- சமூகத்தில் நாம் ஏற்படுத்தக் கூடியவை.

Write an article in which you state the author’s opinion on **two** changes:

- that individuals need to make
- we need to make at our workplaces
- that need to be made in the society.

Write approximately **150** words in **Tamil**.

**End of Section Two**

See next page

This page has been left blank intentionally

**Section Three: Writing in Tamil** **40% (20 Marks)**

This section contains **two** questions. Answer **one** question in **Tamil** on the following pages in approximately **350** words.

Supplementary pages for planning/continuing your answers to questions are provided at the end of this Question/Answer booklet. If you use these pages to continue an answer, indicate at the original answer where the answer is continued, i.e. give the page number.

Suggested working time: 40 minutes.

---

**Question 8** **(20 marks)**

பேர்த் (Perth) தமிழ் இளைஞர் கூட்டத்தில் ' நமது எதிர்காலம் தொழில் நுட்பத்தைச் சார்ந்தது என்றும், அதனைச் சார்ந்தே மக்கள் வாழ வேண்டும்' என்பதை வலியுறுத்தும் பேச்சிற்கான உரை ஒன்றை எழுதுக. உங்கள் உரையில் பின்வருவனவற்றை உள்ளடக்கவும்.

- இன்று பயன்பாட்டில் உள்ள சிறந்த தொழில் நுட்பத்திற்கான எடுத்துக்காட்டுகள்
- எதிர்காலத்தில் தொழில் நுட்பத்தின் முக்கியத்துவம்
- தொழில் நுட்பத்தின் பயன்பாட்டால் மொழிக் கல்விக்கு ஏற்படக் கூடிய விளைவுகள்.

Write a reflective speech on the topic ‘Our future depends on technology, and people should live in harmony with technology going forward’ to deliver at the Perth Tamil Youth Forum. In your speech, include:

- examples of the use of technology
- the importance of technology in the future
- impacts of technology on language education.

**or**

**Question 9** **(20 marks)**

பேர்த் (Perth) தமிழ் இளைஞர் கூட்டத்தில் 'வளர்ச்சியடைந்து வரும் சமூகத்தால் ஒரு தனி மனிதனின் எதிர்கால விருப்பங்கள் எவ்வாறு மாற்றியமைக்கப்படுகிறது' என்பதைப் பிரதிபலிக்கும் பேச்சிற்கான உரை ஒன்றை எழுதுக. உங்கள் உரையில் ஒரு மனிதனின் பின்வரும் எதிர்கால தெரிவுகளுக்கு சமூகத்தால் ஏற்படுத்தப்படும் தாக்கங்களையும் உள்ளடக்கவும்.

- தனிப்பட்ட தெரிவுகள்
- கல்வி
- வேலை
- பிரயாண விருப்பங்கள்.

Write a reflective speech on the topic 'How an individual's future choices are impacted by an evolving society' to deliver at the Perth Tamil Youth Forum. In your speech, include the impacts of an evolving society on an individual's future choices of:

- personal priorities
- education
- work
- travel.

**End of questions**

I am answering

| Question | ✓ |
|---|---|
| 8 | |
| 9 | |

Supplementary page

Question number: ______________

Supplementary page

Question number: ____________

Supplementary page

Question number: ________________

Supplementary page

Question number: ___________________

**Copyright**
© School Curriculum and Standards Authority, 2024

This document – apart from any third-party copyright material contained in it – may be freely copied, or communicated on an intranet, for non-commercial purposes in educational institutions, provided that it is not changed and that the School Curriculum and Standards Authority (the Authority) is acknowledged as the copyright owner, and that the Authority's moral rights are not infringed.

Copying or communication for any other purpose can be done only within the terms of the *Copyright Act 1968* or with prior written permission of the Authority. Copying or communication of any third-party copyright material can be done only within the terms of the *Copyright Act 1968* or with permission of the copyright owners.

Any content in this document that has been derived from the Australian Curriculum may be used under the terms of the Creative Commons Attribution 4.0 International (CC BY) licence.

An *Acknowledgements variation* document is available on the Authority website.

*Published by the School Curriculum and Standards Authority of Western Australia*
*303 Sevenoaks Street*
*CANNINGTON WA 6107*